# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/58 - 2024 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2024.07.26

*2394/58 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### தேர்தலொன்றின்போது போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின்/சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிக் கோவை

*2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8 (8) ஆம் உட்பிரிவுக்கு அமைய வெளியிடப்படுகின்ற இவ்வொழுக்கநெறிக் கோவை தேர்தலொன்றிற்கான பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்படுகின்ற தினத்திலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வரையான காலத்திற்கு ஏற்புடைத்தாகும்.*

*தேர்தல் சட்டத்திற்கமைய அரசியல் கட்சிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக கணிப்பிடப்பட முன்னர் இந்நாட்டின் மக்கள் மத்தியில் சமூகமயப்பட்ட அரசியல் கட்சிகள் காணப்பட்டனவென்பதோடு. அது தொடர்பான வரலாறு 1931 ஆம் ஆண்டு வரை நீண்டு செல்கிறது. அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல் தொடர்பான சட்டங்கள் 1959 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டுள்ளன. சமகால சமூகத்தின் இயக்கத்திற்கு அரசியல் கட்சிகளினால் ஆற்றப்படுகின்ற சேவைகளை மிகவும் அர்த்தமுள்ளதாகவும் விளைபயன்மிக்கதாகவும் மாற்றுவதற்கு சட்டவிதிகளினூடாக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருப்பதனால், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான சிறந்ததொரு சூழ்நிலையைப் பேணும் பாரிய பொறுப்பு அரசியற் கட்சிகள் மீது சுமத்தப்படுகிறது.*

*அப்பொறுப்பையும் கவனத்திலெடுத்து 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலை நோக்காகக்கொண்டு இவ்வொழுக்கநெறிக் கோவை முதன்முதலாக முன்னாள் தேர்தல்கள் திணைக்களத்தினால் அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்குமென பிரகடனப்படுத்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலின் போதும் தேர்தல் முறைப்பாட்டு விசாரணைக்கான குழுக் கூட்டங்களின்போது இது சம்பந்தமாக கலந்தாலோசிக்கப்பட்டதை அடுத்து, அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், கட்சிப் பிரதிநிதிகள், கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளின் உடன்பாடும் இந்த ஒழுக்கநெறிக் கோவைக்கு கிடைத்துள்ளது.*


1A - EPG 6803 — 504 (2024/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்ற திருத்திய இவ்வொழுக்கநெறிக் கோவை ஒவ்வொரு தேர்தலிலும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து முக்கிய பதவிதாங்குநர்களுக்கும், மாகாண சபை மற்றும் உள்ளூரதிகார சபை ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல்வாதிகளுக்கும், அனைத்து அரசியல் கட்சிகளின் செயற்பாட்டாளர்களுக்கும், வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கும், சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும், அவற்றின் வேட்பாளர்களுக்கும், அவற்றின் ஆதரவாளர்களுக்கும் ஏற்புடைத்தாகுமென்பதைக் கவனித்தல் வேண்டும்.

ஆதலால், இதில் காட்டப்பட்டுள்ள ஒழுக்கநெறிகளுக்கமைய செயலாற்றுமாறு தேர்தல்களுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தயவன்புடன் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

***(அ) சட்டவாட்சி* :**

*1. இலங்கையின் அரசியலமைப்பினாலும் ஏனைய நியதிச்சட்டங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விதத்தில், தேர்தல் சட்டங்களுக்கமைய மக்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்புவதற்காக நடாத்தப்படும் தேர்தல்களின் போது அல்லது மக்கள் தீர்ப்பொன்றின் போது வாக்காளருக்கு சுதந்திரமாகவும் எவ்வித அழுத்தமும் இன்றியும் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தலும், அதற்குத் தேவையான உதவிகளையும் ஊக்கப்படுத்தல்களையும் அளித்தலும்.*

*2. தேர்தலொன்றில் போட்டியிட முன்வருகின்ற அனைத்து அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பாளர்களுக்கும் தேர்தல் செயன்முறையில் உரித்தாக்கப்பட்டுள்ள சம உரிமையை அனைத்துப் படிநிலைகளிலும் பாதுகாத்தல்.*

*3. அனைத்து அரசியற் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் உரித்தாகின்ற உரிமைகளுக்கும், வாக்காளர்களை அறிவூட்டுவதற்கான உரிமைக்கும் மதிப்பளிப்பதோடு, எதிர்த்தரப்பினருக்கு அவர்களின் கருத்தைக் கொண்டிருப்பதற்கும், அதற்காக சட்டரீதியாக பிரச்சார நடவடிக்கைகளை/ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான உரிமைக்கு தடங்கல்களை ஏற்படுத்தாதிருத்தல்.*

*4. இலங்கையில் செயல்வலுப்பெறும் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள அரச, பகுதியளவு அரச, தனியார் அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு சட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்டுள்ளவாறான அன்றேல் விதிக்கப்பட்டுள்ளவாறான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எவ்விதத்திலும் தடங்கல்களையோ அழுத்தங்களையோ ஏற்படுத்தாமை.*

*5. நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கின்ற நியதிச்சட்டப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கும் அவை பொறுப்புவிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் உரிய கடமைகளை நிறைவேற்றும்போது தடங்கல்களை அல்லது அழுத்தங்களை ஏற்படுத்தாமை.*

*6. பொது மக்களின் இயல்பு வாழ்விற்கு இடையூறுகள் ஏற்படாத விதத்திலும், நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகளை மீறாத விதத்திலும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல்.*

*7. அனைத்து தேர்தல்களுக்கும் உரிய சட்டங்களில் காணப்படும் சட்ட ஏற்பாடுகள் (பிரிவுகள்) தொடர்பாக அனைத்து வேட்பாளர்களுக்கும், முக்கிய செயற்பாட்டாளர்களுக்கும் தெளிவைப் பெற்றுக்கொடுத்தலும், அத்தகைய சட்டங்களில் காணப்படுகின்றவாறான தவறுகள், ஊழல் நடத்தைகள் மற்றும் சட்டவிரோதமான செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறு ஆலோசனை வழங்குதலும்.*

*8. வாக்கெடுப்போடு அல்லது வாக்கெண்ணலோடு தொடர்புடைய பொருட்கள், உபகரணங்கள், ஆவணங்கள் என்பவற்றை தகுதிவாய்ந்த அதிகாரியொருவரின் அனுமதியின்றித் தொடுவதை அல்லது களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள இடத்திலிருந்து வெளியே எடுத்துச்செல்வதை தவிர்த்தல்.*

*9. தேர்தல் சட்டங்களை மீறுதல், தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல், தேர்தல் மோசடிகளையும் குற்றங்களையும் புரிதல் சம்பந்தமான சட்ட வினைப்படுத்துகைப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாதிருத்தலும், அத்தகைய பிரிவுகளுக்கு சுதந்திரமாக இயங்குவதற்கு அவசியமான பின்னணியை ஏற்படுத்துதலும்.*

**(ஆ) பொதுவான நடத்தை :**

1. இலங்கையர்கள் பின்பற்றுகின்ற மதங்கள், புழங்குகின்ற மொழிகள், அவர்களின் இனங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் குலகோத்திரங்கள் போன்ற வேறுபாடுகள் தொடர்பாக இனப்பிரிவொன்றில் அல்லது ஆட்களிடையே பகைமையுணர்ச்சியை அல்லது சகிப்புத்தன்மையின்மையை ஏற்படுத்தக்கூடிய விதத்திலான அல்லது ஏற்படுகின்ற விதத்திலான நடத்தைகளைத் தவிர்த்தல் மற்றும் அவ்வாறான உணர்வுகள் ஏற்படுகின்ற விதத்திலான கருத்துக்களை அல்லது விடயங்களை வெளியிடாதிருத்தல்.

2. அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற விமர்சனங்கள், அந்தந்த கட்சிகளின் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கடந்த கால செயற்பாடுகள் என்பவற்றோடு மட்டுப்படுத்தப்பட வேண்டுமென்பதோடு, எதிர்க்கட்சியினரின் அதேபோல் தமது கட்சியைச் சேர்ந்தவர்களின் அல்லது வேட்பாளர்களின் பொதுவான நடவடிக்கைகளோடு தொடர்புடையதல்லாத, அவர்களின் தனிப்பட்ட அலுவல்களை விமர்சிப்பதைத் தவிர்த்துக்கொள்ளலும், எண்பிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள், எண்பிக்க முடியாத விடயங்கள் மற்றும் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலான விமர்சனங்களை மேற்கொள்ளாதிருத்தலும்.

3. தேர்தலின் மூலம் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நியதிச்சட்ட நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதன் மூலம் இலங்கையர்களின் எதிர்கால முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு அர்ப்பணிக்கக்கூடிய வேட்பாளர்களை போட்டியிடச்செய்து அவர்களை ஒழுக்க சீலத்துடனும் பக்குவத்துடனும் போட்டியிட வழிகாட்டுதல்.

4. அரசியல் கட்சிகளதும் சுயேச்சைக் குழுக்களதும் தலைவர்கள் போட்டியிடுவதற்காக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது, அவர்களின் முந்திய செயற்பாடுகளின் நேரிய தன்மை, சட்டத்தை மதித்துச் செயலாற்றுதல், சட்டத்தின் முன் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகாமை, மக்கள் சேவைக்கான அர்ப்பணிப்பு, பண பலத்தை அல்லது சமூக பலத்தைப் பயன்படுத்தி மக்களைத் துன்புறுத்தாமை முதலான குணநலன்களின்பால் கவனம் செலுத்தி நடவடிக்கையெடுத்தல்.

5. சனாதிபதித் தேர்தல் வேட்பாளரால் தத்தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான வெளிப்படுத்துகையை 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 80(1), (11), 81, 82(5)(ஊ), 82(2), 89 ஆம் பிரிவுகளின் பிரகாரம், பெயர் குறித்த நியமனப் பத்திரங்களுடன் இணைத்து தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. வாக்கெடுப்பு நிலைய வளவிற்குள் அல்லது வாக்கெண்ணல் மண்டப வளவிற்குள் புகைபிடித்த அல்லது மது அருந்திய நிலையில் வருவதைத் தவிர்ந்து கொள்ள வேண்டுமென வேட்பாளர்களை/முகவர்களை அறிவுறுத்துதல்.

7. பெயர்குறித்த நியமனங்களைக் கையேற்கும் நிலையம் அல்லது வாக்கெடுப்பு நிலையம், அந்த வளவு அல்லது வாக்கெண்ணல் நிலையம் அல்லது முடிவுகளை வெளியிடும் நிலையம் என்பவற்றினுள் அனுமதியளிக்கப்பட்டுள்ள ஆட்கள் மாத்திரம் உட்பிரவேசித்தலும், அவ்விடங்களுக்கு சுடுகலன்களை எடுத்து வரலாகாதென்ற விதிக்கிணங்க செயற்படுதலும்.

8. தேர்தலோடு தொடர்புடைய தடுக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது தமது ஆதரவாளர்களை அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்டுதல் அல்லது அதற்கு உடந்தையாக இருத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல்.

9. தேர்தல் காலப்பகுதியினுள் நடைபெறும் அரச வைபவங்களின்போது வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகளின் முன்னணி செயற்பாட்டாளர்கள் கலந்துகொள்ளாதிருத்தலும், அவ்வாறான வைபவங்களை கட்சி வேட்பாளர் ஊக்கப்படுத்தலுக்கு பயன்படுத்திக் கொள்ளாதிருத்தலும்.

**(இ) தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் :**

1. தேர்தல் சட்டத்தில் காணப்படுகின்றவாறு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை சட்டரீதியாகவும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் விதத்திலும் மேற்கொள்ளல், எதிர்த்தரப்பினர்களின் சட்டரீதியான தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்காமையும், சட்டரீதியாக தேர்தல் பிரச்சார அலுவலகங்களைப் பராமரித்தலும்.

2. தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தமது கட்சியின் கொள்கைகளையும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் தமது கட்சி அமுல்படுத்த உத்தேசிக்கும் வேலைத்திட்டமொன்றையும் வாக்காளர்களுக்கு சமர்ப்பித்தலும், அதன் பிரதிகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அதன் மூலம் சுவடிக்கூட திணைக்களத்துக்கும் அனுப்புதலும்.

3. அச்சிட்ட ஆவணங்கள் அல்லது துண்டுப்பிரசுரங்கள் மூலம் வாக்காளர்களை அறிவூட்டத்தக்க ஆவணங்களை அச்சிடுதலும் பகிர்ந்தளித்தலும் தொடர்பாக தேர்தல் சட்டத்துக்கமைய செயலாற்றுதல்:

(i) அச்சகரின்/வெளியீட்டாளரின் தகவல்களின்றி துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், சட்டவிரோத அறிவித்தல்களை அச்சிடல் போன்ற விடயங்களைத் தவிர்த்தல் ;

(ii) சட்டத்தினால் தடுக்கப்பட்டிருந்தால் வேட்பாளர்களும் வேட்பாளர்களின் நெருங்கிய உறவினர்களும் துண்டுப் பிரசுரங்களைப் பகிர்ந்தளிக்கும் நோக்கத்துக்காக அல்லது வாக்குகளை இரந்து கேட்டல் என்பனவற்றிற்காக வீட்டுக்கு வீடு செல்லும்போது ஊர்வலமாக, பேரணியாக, பாரிய சனக் குழுமமாக அல்லது இசை முழக்கங்கள், காட்சிப் பலகைகளை ஈடுபடுத்திக் கொள்ளாதிருத்தலும், சட்டத்தினால் தடைசெய்யப்பட்டிருப்பின், வேட்பாளர்களும் நெருங்கிய உறவினர்களும் வாக்குகளை இரந்து கேட்பதற்கு வீட்டுக்கு வீடு செல்வதை தவிர்த்தலும்.

4. தேர்தலின்போது அரசியல் செய்திகள், எழுத்தாக்கங்கள் அல்லது அறிவித்தல்கள் முதலிய அனுபந்தங்களை அரச அல்லது அரச நிறுவனங்களின் செலவில் பிரசுரிக்காதிருத்தல்.

5. தமது கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அல்லது வேட்பாளர்களின் வெற்றியை இலக்காகக் கொண்டு அல்லது வேறொரு தரப்பினரின் தோல்வியை எதிர்பார்த்து எந்தவொரு தேர்தல் பிரச்சார அறிவித்தலையும், பிரச்சாரப் பலகைகளையும், அதனோடு தொடர்புடைய புகைப்படங்களையும், சித்திரங்கள் போன்றவற்றையும் அனுமதியளிக்கப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களில் அல்லது பிரச்சாரக் கூட்டம் நடைபெறும் தினம் கூட்டம் நடைபெறும் வளவில் தவிர பொதுமக்களுக்கு தெரியக்கூடியவாறு அரசுக்கு அல்லது தனியாருக்குச் சொந்தமான கட்டிடமொன்றில், வதிவிடமொன்றில், வெற்றுக் காணியொன்றில் அல்லது பொதுமக்கள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள பாதைகளில் அல்லது பொது இடங்களில் சட்டவிரோதமாக காட்சிப்படுத்துவதைத் தவிர்த்தல்.

6. கட்சிகள்/வேட்பாளர்கள் என்ற வித்தியாசமின்றி பொதுவான நிலைமையின் கீழ் வாடகை அடிப்படையில் வழங்கப்படும் கூட்ட மண்டபங்கள் அல்லது விளையாட்டு மைதானங்கள் முதலியன தவிர அரச அல்லது பகுதியளவு அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான காணியொன்று, கட்டிடமொன்று அல்லது ஆதனமொன்று அல்லது சேவையொன்று அரச அலுவலர்கள் தேர்தல் பிரச்சார/ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதைத் தவிர்ந்து கொள்ளலும், அரச அலுவலகங்கள், பாடசாலைகள் முதலிய யாதொரு நிறுவனத்திலும் அல்லது அவற்றின் வளவுகளில் வாக்குகளை இரந்து கேட்டல், துண்டுப்பிரசுரங்களைப் பகிர்ந்தளித்தல், காட்சிப் பலகைகளை அல்லது அறிவித்தல்களை வெளிக்காட்டி வைத்திருக்கச் செய்தல் முதலான பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தலும்.

7. அரசியல்வாதிகளுக்கு குறித்தொதுக்கப்பட்ட அரச குடிமனைகளை கட்சிகள் அல்லது வேட்பாளர் ஊக்கப்படுத்தலுக்கு தேர்தல் அலுவலகங்களாக பயன்படுத்தலாகாது. மேலும், அவ்வாறான குடிமனைகளில் தேர்தல் சட்டவிதிகளுக்கு அல்லது ஆணைக்குழுவினால் வர்த்தமானியின் மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ள பணிப்புகளுக்கு மாறாக ஏதேனும் தவறு அல்லது ஊழல் பழக்கம் அல்லது சட்டவிரோத நடத்தை புரியப்படுதலாகாது.

8. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பொதுக் கட்டிடங்கள், விளையாட்டு மைதானங்கள், அரச சுற்றுலா விடுதிகள் என்பன பயன்படுத்தப்படுமாயின், உரிய கட்டணம் செலுத்தி அவற்றைப் பயன்படுத்துதலும், அவ்வாறான வாய்ப்புகளை அதேமுறையில் அனைத்து தேவையான தரப்பினராலும் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு நடவடிக்கை எடுத்தலும்.

9. உள்ளூர் அதிகாரசபைகளுக்குச் சொந்தமான விளையாட்டு மைதானங்களை அல்லது மண்டப வசதிகளைக் குறித்தொதுக்கும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்காக மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் அந்தந்த தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நடாத்தப்படும் மாவட்டக் குழுவின் உத்தரவுகளுக்கமைய செயலாற்றுவதற்கு அனைத்து அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10. தேர்தல் நடாத்தப்படுகின்ற ஒரு பிரதேசத்தில் அரசாங்கத்தினால் அல்லது அரசாங்க ஆதரவில் களியாட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பன நடாத்தப்படுமாயின், அத்தகைய நிகழ்வுகளை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களினதும் கட்சிகளினதும் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு அல்லது தேர்தல் பிரச்சாரங்களோடு தொடர்புபடுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்காதிருத்தல்.

11. அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவர்களல்லாத அரச அலுவலர்களினதும் முனைப்பான சேவையில் ஈடுபட்டிருக்கின்ற பாதுகாப்புப் படை மற்றும் பொலிஸ் அலுவலர்களினதும், இளைப்பாறிய பாதுகாப்புப் படை அலுவலர்கள் அல்லது பொலிஸ் அலுவலர்கள் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது பெற்றுக்கொள்ளும்

அல்லது சீருடை தரித்தவர்களாக பெற்றுக்கொள்ளும் புகைப்படங்களை அல்லது வெளிப்படுத்துகைகளை கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்றவாறு அல்லது பாதிப்புக்கு உள்ளாக்குகின்றவாறு இலத்திரனியல், அச்சு, சமூக ஊடக அல்லது வேறு பிரச்சார ஊடகமொன்றினூடாக வெளிப்படுத்துதல், ஒலிபரப்புதல் அல்லது பகிரங்கப்படுத்துவதற்கு பயன்படுத்தலாகாது.

12. மக்கள் பிரதிநிதிகளின் சட்டரீதியான மெய்ப்பாதுகாவலர்களாகக் கடமையாற்றுகின்ற பொலிஸ் மற்றும் ஏனைய பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளை உத்தியோகப்பற்றற்ற விதத்தில் அரசியல் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக்கொள்வதையும், எதிர்க்கட்சியினரின் தேர்தல் நடவடிக்கைகளை கீழ்ப்படுத்துவதற்கு பயன்படுத்திக்கொள்வதையும் தவிர்ந்துகொள்ளல், அவ்வாறான செயற்பாடுகளை பகிரங்கமாகவே இழிவாகக் கருதுதல்.

13. மக்கள் பிரதிநிதியொருவரின் பாதுகாப்புக்காக சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள சுடுகலன்களையும் ஏனைய பாதுகாப்பு உபகரணங்களையும் சாதனங்களையும் குறித்த மக்கள் பிரதிநிதியின் பாதுகாப்புக்காகவன்றி வேறெந்தவொரு சட்டரீதியற்ற நடவடிக்கைக்கும் ஈடுபடுத்துவதைத் தவிர்த்தல்.

14. தேர்தல் பிரச்சார/ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக எந்தவொரு சமயத்தலத்தையோ, சமயத்தலமொன்றுக்கு உரித்தான காணியொன்றையோ, ஆதனமொன்றையோ பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.

15. அரசியற் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்களின் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பொதுவாக வழங்கப்படுகின்ற அரசாங்க இடங்களை ஒரு கட்சியின் அல்லது ஒரு வேட்பாளரின் பிரச்சார அலுவல்களுக்காக மாத்திரம் குறித்தொதுக்கிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தலாகாது என்பதோடு, வேறு கட்சிகள்/குழுக்கள்/வேட்பாளர்களின் பிரச்சார அலுவல்களுக்காகவும் அவ்வாறான இடங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சம சந்தர்ப்பம் அளிக்கப்படுதல் வேண்டும்.

16. தேர்தலோடு தொடர்புடைய கொடிகள் அல்லது அறிவித்தல்கள் அல்லது ஒட்டுத்தாள்கள் அல்லது வேட்பாளரின் இலக்கம், பெயர், புகைப்படம் என்பவற்றை வேட்பாளர் பயணம் செய்கின்ற வாகனத்தில் மாத்திரம் காட்சிப்படுத்துதலும், பதிவுசெய்யப்படாத வாகனங்களை அல்லது கராஜ் இலக்கம்/போலி இலக்கம் கொண்ட வாகனங்களை தமது சொந்த தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்திக் கொள்ளாதிருத்தலும்.

17. தேர்தல் பிரச்சாரத்திற்காக மேற்கொள்ளப்படுகின்ற சோடனைகளை அனுமதியளிக்கப்பட்டுள்ள தேர்தல் பிரச்சாரக் கூட்டம் நடைபெறுகின்ற காணியில் சுற்றுச்சூழலை மாசுபடுத்தாதவாறு மேற்கொள்ளலும், பிரச்சார நடவடிக்கைகளுக்கு சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் பொருட்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தலும், அத்தகைய கூட்ட நடவடிக்கைகளின் பின்னர் கால தாமதமின்றி அச்சோடனைகளை அகற்ற நடவடிக்கையெடுத்தலும்.

18. தேர்தல் காலப்பகுதியில் தேர்தல் பிரச்சார/ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்குரிய ஊர்வலங்களையும், பொதுமக்கள் ஊர்வலங்களையும் வாகனப் பேரணிகளையும் நடாத்துவது தேர்தல் சட்டங்களை மீறும் செயல்களென்பதால், அவ்வாறான பொதுமக்கள் ஊர்வலங்கள், வாகனப் பேரணிகள், துவிச்சக்கர வண்டி ஊர்வலங்கள் போன்ற எவற்றையும் தேர்தல் காலக்கெடுவினுள் நடத்தாதிருத்தல்.

19. ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கு உரிய அனுமதி பெற்ற பின்னர் மாத்திரம் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துதல், கூட்ட காலத்திற்கும் அக்காணிக்கும் மாத்திரம் அந்த ஒலிபெருக்கிகளை மட்டுப்படுத்துதல், வாகனம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது அவ்வாகனங்களில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கியூடாக பிரச்சாரம் செய்யப்படுவதைத் தவிர்த்தல்.

20. தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படுவதற்கு உரிய நேரத்துக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் உரிய தேர்தல் சட்டத்திற்கு அமைய தேர்தல் பிரச்சாரங்களை நிறுத்த நடவடிக்கையெடுத்தல் மற்றும் அவ்வமைதி காலப்பகுதியினுள் அரசியல் கட்சிகள் அல்லது வேட்புரிமையை ஊக்கப்படுத்தக்கூடிய இசை நிகழ்ச்சிகள் போன்ற வற்றை நடாத்துதல், அச்சு/இலத்திரனியல் ஊடகங்களூடாக பிரச்சாரம் செய்தல் போன்ற பணிகளை இடை நிறுத்துதல்.

21. எந்தவொரு கட்சியையும் அல்லது சுயேச்சைக் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்தில், மாகாண சபையொன்றில் அல்லது உள்ளூர் அதிகார சபையொன்றில் மக்கள் பிரதிநிதியொருவராகப் பதவி வகிக்கின்றவர், ஏதேனுமொரு கட்சியை அல்லது சுயேச்சைக் குழுவை அல்லது அவற்றின் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதற்காக மக்கள் பிரதிநிதியொருவர் என்ற வகையில் தனக்கு கிடைக்கப்பெற்றுள்ள வரப்பிரசாதங்களையும், அதிகாரங்களையும், வாகனங்கள் மற்றும் ஏனைய அரச வளங்களையும் பயன்படுத்தாதிருத்தலும், உத்தியோகபூர்வ கடமை அலுவல்களின் ஊடாக தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை தவிர்த்தலும்.

22. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக கட்டணமின்றி அரச வானூர்திகளையோ, வேறு வாகனங்களையோ பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளல்.

23. ஏதேனுமொரு தேர்தல் சட்டத்துக்கமைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஊடாகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடாகவும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் தேர்தல் சட்டத்தின்கீழ் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்ற வானலை கால எல்லைகளை உரிய கூட்டுத்தாபனத் தலைவரினாலும் தேர்தல் ஆணைக்குழுவினாலும் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய பயன்படுத்துதல் (மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்களுக்குப் பொருந்தாது).

24. ஏதேனுமொரு தேர்தல் சட்டத்துக்கமைய தேர்தலொன்றின் போது தேருநர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் செய்தியொன்றை அனுப்புவதற்குள்ள உரிமையை, உரிய சட்ட ஏற்பாடுகள் மற்றும் அஞ்சல்மா அதிபரினால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் என்பவற்றுக்கமைய பயன்படுத்துதல் (இவ்வாய்ப்பு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்களுக்குப் பொருந்தாது).

25. க.பொ.த. சாதாரண தர அல்லது உயர்தரப் பரீட்சைகள் மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை உட்பட வேறு பிரசித்தமான பரீட்சைகள் நடைபெறும் பாடசாலைகள் மற்றும் அப்பரீட்சைகளின் விடைத்தாள்கள் மதிப்பீடுசெய்யப்படும் பாடசாலைகள், பரீட்சை நிலையங்கள் என்பவற்றின் நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும் விதத்தில் அப்பாடசாலைகளின்/நிலையங்களின் சுற்றுப்புறத்தில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளல்.

26. பிரச்சார நடவடிக்கைகளின் போது சிறுவர்களின் நிழற்படங்கள் அடங்கிய சுவரொட்டிகள், விளம்பரங்கள், பெரியளவிலான உருவப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளைப் பயன்படுத்துவத்தைத் தவிர்ந்துகொள்ள வேண்டும் என்பதுடன், பிரச்சார நடவடிக்கைகளுக்கு சிறுவர்களை பங்குகொள்ளச் செய்வதைத் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

27. பொதுப் பரீட்சைகளுக்கும் புலமைப்பரிசில் பரீட்சைக்கும் ஏற்புடையதாக நடாத்தப்படுகின்ற கல்விக் கருத்தரங்குகளின் ஊடாக கட்சி/வேட்பாளர் ஊக்கப்படுத்தலை மேற்கொள்ளாதிருத்தல்.

28. எவரேனும் வேட்பாளரொருவரினால் வேறு கட்சியொன்று அல்லது வேறு வேட்பாளரொருவர் சம்பந்தமாக முன்பு தெரிவித்த கூற்றொன்றை அல்லது கருத்தொன்றைத் தெரிவிப்பதற்கு வேறு கட்சியொன்று அல்லது வேட்பாளரொருவர் ஊக்கப்படுத்தலுக்கு அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதற்கு பயன்படுத்துதல் சம்பந்தமாக அக்கூற்றை அல்லது கருத்தை முன்பு தெரிவித்த ஆள் எதிர்ப்புத் தெரிவிப்பாராயின், அவ்வாறான கூற்றை/கருத்தை பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்து கொள்ளல்.

29. சமூக ஊடகங்களும் இணையமும் ஊடாக தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்தி சமூக ஊடகங்களுக்கு ஏற்புடைய ஒழுக்கநெறிக் கோவைக்கு இசைவாக அதனை மேற்கொள்ளல்.

i. செயற்கை நுண்ணறிவின் (AI) துணையுடன் ஆக்கப்பட்ட கணினிச் செய்நிரல்களின் மூலம் உண்மைக்குப் புறம்பான செய்திகள், போலியான தகவல்கள், வேண்டுமென்றே திட்டமிட்டு உருமாற்றப்பட்ட அல்லது திரிபுபடுத்தப்பட்ட தகவல் பரப்பீடுகளை செய்யாதிருத்தல்.

ii. வேறு ஆட்களின் பெயரில் போலியான சமூக ஊடகக் கணக்குகளை உருவாக்கி ஏனைய வேட்பாளர்களை பாதிப்புக்குள்ளாக்கும் விதத்தில் செயலாற்றாதிருத்தல்.

iii. வேறு கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்கப்படுத்துவதில் ஈடுபடும் ஆட்களுக்கு இணையம் மற்றும் சமூக ஊடகங்களின் ஊடாக பயமுறுத்தல்களையும் துன்புறுத்தல்களையும் மேற்கொள்ளாதிருத்தல்.

iv. உண்மைக்குப் புறம்பான செய்திகள், போலியான தகவல்கள், வேண்டுமென்றே திட்டமிட்டு மாற்றப்பட்ட அல்லது திரிபுபடுத்தப்பட்ட தகவல் பரம்பலுக்கு சமூக ஊடக செயற்பாட்டாளர்களை ஈடுபடுத்திக்கொள்ளாதிருத்தல்.

v. போலியான சமூக ஊடக கணக்குகளின் ஊடாக தவறான மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு அல்லது எடுத்துக்காட்டுவதற்கு முயற்சி எடுக்காதிருத்தல்.

vi. *சமூக ஊடகங்கள் வாயிலாக தேர்தலுக்கு முந்திய கருத்துக் கணிப்புகளை மேற்கொள்வதற்கு உடந்தையாகாதிருத்தல்.*

vii. *சமூக ஊடகங்களில் பிரபல்யமடைந்துள்ள செல்வாக்குச் செலுத்துபவர்கள் (influencers) ஊடாக பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அது சம்பந்தமான ஒழுக்கநெறிக் கோவைக்கு ஏற்புடையவாறு அதனை மேற்கொள்ளுதல்.*

***(ஈ) வாக்கெடுப்பு தினம்:***

*1.* *தேர்தல் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றர் தூர எல்லைக்குள் மேற்கொள்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள எந்தவொரு செயலையும் குறிப்பாக, வாக்குகளை இரந்துகேட்டல் முதலான தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களைப் புரியாதிருத்தல்.*

*2.* *வாக்களிப்பதற்காக வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகின்ற வாக்காளர்களுக்கும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கினைப் பிரயோகிக்கின்ற வாக்காளர்களுக்கும் எவ்வித இடையூறையும் ஏற்படுத்தாதிருத்தலும், வாக்கினைப் பிரயோகிப்பதற்கு அழுத்தங்களைப் பிரயோகிக்காமையும், வாக்காளர்களுக்கு தமது வாக்கினை சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் இரகசியமாகவும் பிரயோகிப்பதற்குள்ள உரிமைக்கு பங்கம் விளைவிக்காதிருத்தலும்.*

*3.* *தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வேட்பாளர்கள், கண்காணிப்பாளர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களும் ஆகியோர் எந்தவோர் அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்படுவதையும் உடல்ரீதியான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதையும் அல்லது அவர்களின் ஆதனங்களுக்கு சேதம் விளைவிப்பதையும் தவிர்ந்து கொள்ளலும், வாக்களிக்க வருகின்ற அல்லது வாக்களித்து விட்டுச் செல்கின்ற வாக்காளர்களைப் பயமுறுத்துவதையும் அவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதையும் தவிர்ந்து கொள்ளலும், வாக்கெடுப்பு நிலைய முகவர்களை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து விரட்டுவதைத் தவிர்ந்து கொள்ளலும்.*

*4.* *வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியுள்ளவர்கள் மாத்திரம் (போட்டியிடுகின்ற அரசியல் கட்சியொன்றின் செயலாளர், வேட்பாளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்) அதில் உட்பிரவேசிக்க வேண்டுமாதலால், அது தொடர்பில் ஒத்துழைப்பு வழங்கி செயற்படுதலும், தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டியமையும், வாக்கெடுப்பு நிலையத்தினுள் பாதுகாவலர்களை அல்லது ஊடகவியலாளர்களை அல்லது புகைப்படப்பிடிப்பாளர்களை அழைத்து வருவதைத் தவிர்ந்து கொள்ளலும்.*

*5.* *தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயலெதனையும் தேர்தல் ஊழல் பழக்கமொன்றையும் புரிவதையும், அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதையும் தவிர்த்தல் (வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குப்பெட்டிகளை பலவந்தமாக நிரப்புதல், வாக்கெடுப்பு நிலையத்தினுள் அத்துமீறி நுழைதல்/ஆள்மாறாட்ட வாக்கு அடையாளமிடல் முதலான குற்றங்களும் ஊழல் செயற்பாடுகளும்).*

*6.* *சட்டரீதியற்ற முறையில் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாக்காளர்களை போக்குவரத்துச் செய்யாமலிருப்பதற்கு வழிவகை செய்தல்.*

*7.* *வாக்கெடுப்பை நடாத்துவதற்காக அந்நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள பணியாட்குழுவுக்கு எதிர்பார்க்கப்பட்டவாறு உதவுதலும், அவர்களின் பணிகளுக்கு வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் இடையூறுகளை ஏற்படுத்தாமலிருப்பதற்கு வழிவகை செய்தலும்.*

*8.* *தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் வாக்கெடுப்பு நடவடிக்கைகளைக் கண்காணிக்கின்ற முகவர்களுக்கும் கண்காணிப்பு நிறுவனங்களின் முகவர்களுக்கும் இடையூறுகளை ஏற்படுத்தாதிருத்தலும், அவர்களின் பணிகளை ஆற்றுவதில் ஒத்துழைப்பு வழங்குதலும்.*

*9.* *வாக்கெடுப்பு நிலைய வளவினுள் புகைப்படமெடுத்தல், கையடக்கத் தொலைபேசிப் பாவனை போன்ற தடைசெய்யப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளாதிருத்தலும், வாக்கெடுப்பு நிலையமொன்றில் அல்லது அஞ்சல் வாக்கெடுப்பு நிலையமொன்றில் புகைப்படம் எடுப்பதையும், வீடியோ படம் எடுப்பதையும் தவிர்த்தல் வேண்டும். யாதேனுமொரு*

விதத்தில் அவ்வாறு புகைப்படங்களை/வீடியோ காட்சிகளை படம் எடுத்தல் அல்லது வேறொருவரினால் எடுக்கப்பட்ட புகைப்படங்களை அல்லது வீடியோ காட்சிகளை இலத்திரனியல், அச்சு அல்லது சமூக ஊடகங்கள் வாயிலாக பிரசித்தப்படுத்துவதற்கும் அல்லது விநியோகிப்பதற்கும் உடந்தையாக இருப்பதையும் தவிர்த்தல் வேண்டும்.

மேற்குறித்த விடயங்கள் ஏற்புடையதாகின்றவிடத்து அஞ்சல் வாக்கு அடையாளமிடும் தினத்திற்கும் செல்லுபடியாகுமென்று கருதலாம்.

**(உ) வாக்குகளையும் மற்றும் விருப்புக்களையும் எண்ணலும் (அஞ்சல் வாக்குகள் உள்ளிட்ட) தேர்தல் முடிவுகளை வெளியிடுதலும்:**

1. வாக்குகள் மற்றும் விருப்புக்களை எண்ணல் (அஞ்சல் வாக்கெண்ணலும் அடங்கலாக) நடைமுறை தொடர்பாக தமது வாக்கெண்ணல் முகவர்களை அறிவூட்டலும், முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கும் உரிய முறைமை தொடர்பாக தமது முகவர்களை அறிவுறுத்துதலும்.

2. வாக்கெண்ணல் மண்டபத்தினுள்ளும் தேர்தல் முடிவுகள் தயாரிக்கப்படும் நிலையத்தினுள்ளும் அந்நடவடிக்கைகளை நிர்வகித்தல் தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலரினாலும் தேர்தல் ஆணைக்குழுவினாலும் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கையெடுத்தல் இன்றியமையாததென்று தத்தம் முகவர்களை அறிவுறுத்துதல்.

3. வாக்கெண்ணல் முகவர்களாக முறையாக நியமனம் செய்யப்பட்டிருந்தால் ஒழிய அல்லது வேட்பாளரொருவராக இருந்தால் ஒழிய, அரசாங்க அல்லது மாகாண சபைகளின் அமைச்சர்கள், பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளின் உறுப்பினர்கள் அல்லது ஏனைய அரசியல்வாதிகள் உரிய அனுமதியின்றி வாக்கெண்ணல் வளவுக்குள், மண்டபத்துக்குள் பிரவேசிக்காதிருப்பதற்கு வழிவகை செய்தல்.

4. வாக்கெண்ணல் அல்லது முடிவுகளை வெளியிடும் மண்டபங்களில் முகவர்களாக வருகை தருகின்ற எந்தவோர் அரசியல்வாதியும் சுடுகலன்களுடன் வருகின்ற அல்லது சுடுகலன்களின்றி வருகின்ற பாதுகாவலர்களை அம்மண்டபத்திற்குள் அழைத்து வருவதைத் தவிர்த்தலும், வாக்கெண்ணல்/முடிவுகளை வெளியிடும் மண்டப வளவு என்பவற்றினுள் அனுமதியற்ற ஆட்களை அழைத்து வருவதைத் தவிர்த்தலும்.

**(ஊ) குரோத மனப்பான்மையுடன்கூடிய வெளிப்படுத்துகைகள் அல்லது தேசிய ஐக்கியத்திற்கு எதிரான வெளிப்படுத்துகைகளும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுதலும் :**

பின்வருமாறான குரோத மனப்பான்மையுடன் கூடிய வெளிப்படுத்துகைகள் அல்லது தேசிய ஐக்கியத்துக்கு எதிரான வெளிப்படுத்துகைகள் மற்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்கள் வாயிலாக வெளியிடுவதையும், அத்தகைய வெளிப்படுத்துகைகளுக்கு உடந்தையாக அமைகின்ற விதத்தில் எதிர்வினையாற்றுவதையும் தவிர்த்தல் வேண்டும்.

1. பெண்கள், மாற்றுத்திறனாளிகள் அதாவது அங்கவீனர்கள், வித்தியாசமான பால் ரீதியான தோற்றத்துடன்கூடிய ஆட்கள் மற்றும் பிற மத அல்லது இனக் குழுமங்கள் என்பவற்றை வேறுபிரித்துக் காட்டி அத்தகைய சன அல்லது சமூகக் குழுமங்களைப் பயமுறுத்தும் அல்லது அசௌகரியத்துக்குள்ளாக்கும் விதத்தில் குரோத மனப்பான்மையுடன்கூடிய வெளிப்படுத்துகைகளைச் செய்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

2. அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற அனைவரும் குரோத மனப்பான்மையுடன்கூடிய வெளிப்படுத்துகைகளைச் செய்வதை எப்பொழுதும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஆயினும், குறிப்பாக ஏதேனும் தேர்தலுக்கான பெயர்குறித்த நியமன காலப்பகுதி ஆரம்பிக்கின்ற முதல் நாள் தொடக்கம் அத்தேர்தல் நடாத்தப்படுகின்ற தினத்திற்குப் பின்னர் வருகின்ற நாளில் முடிவடையும் காலப்பகுதிக்குள் அவ்வாறு செய்வதைக் கட்டாயமாக தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

3. குரோத மனப்பான்மையுடன்கூடிய வெளிப்படுத்துகைகள் குற்றமாக இனங்காணப்பட்டுள்ளமையால், அத்தகைய வெளிப்படுத்துகைகளைச் செய்பவர்கள் தொடர்பாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

4. இன மற்றும் மதக் குழுக்களிடையே நிலவுகின்ற நட்புறவையும் பரஸ்பர நம்பிக்கையையும் குலைக்கக்கூடிய விதத்திலான எந்தவொரு வெளிப்படுத்துகையைச் செய்வதையும் அல்லது எந்தவோர் உருவப்படத்தையும் காட்சிப்படுத்துவதையும் தவிர்த்தல் வேண்டும்.

5. இன அல்லது மதக் குழுக்களினதும் ஆட்களினதும் அபிமானம் கெடக்கூடிய அல்லது அதற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய ஏதேனும் வெளிப்படுத்துகைகளைச் செய்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்பதோடு, அத்தகைய வெளிப்படுத்துகைகளை பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

6. மத, இன, மொழி, சாதி அல்லது பாலினம் ரீதியான வேறுபாடுகளை அடிப்படையாக வைத்து யாதேனுமொரு ஆளுக்கு அல்லது யாதேனுமொரு குழுவுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அல்லது பாரபட்சம் காட்டப்படுவதாக கருதப்படத்தக்க ஏதேனும் வெளிப்படுத்துகைகளைச் செய்வதையோ, ஏதேனும் செயலைப் புரிவதையோ தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

7. பெண்ணொருவரின் உடல் அங்கங்களை அடிப்படையாக வைத்து பெண்களைத் தாழ்த்தக்கூடிய விதத்திலான அல்லது பழித்துரைக்கும் விதத்திலான ஏதேனுமொரு வெளிப்படுத்துகையைச் செய்வதை அல்லது ஏதேனுமொரு செயலைப் புரிவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்விடயம் பெண்கள் தொடர்பில் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அனைத்துப் பிரசைகளுக்கும் பொருந்தக்கூடியதாதலால், அவ்வாறான விடயங்களை மேற்கொள்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

8. ஆளொருவரின் ஏதேனுமொரு விதத்திலான அங்கவீனம் அல்லது உடல் இயலாமை தொடர்பாக தாழ்த்தும் விதத்திலான அல்லது பழித்துரைக்கும் விதத்திலான வெளிப்படுத்துகையொன்றை செய்வதை அல்லது செயலெதனையும் புரிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

9. தேர்தல் காலப்பகுதிக்குள் எதிர்த்தரப்பினர்களுக்கும் மற்றும் அவர்களின் செயற்பாட்டாளர்களுக்கும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினூடாக எண்பிக்க முடியாத அல்லது தவறான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உரிய தரப்பினருக்கு அவற்றிற்கு பதிலளிப்பதற்கான சந்தர்ப்பத்தைக்கூட வழங்காமல் நிகழ்ச்சிகளை பிரச்சாரம் செய்வதற்கு ஊடகங்களைப் பயன்படுத்துவதை விட்டும் தவிர்ந்திருத்தல்.

10. அரசியல் கட்சியொன்று அல்லது அரசியல்வாதிகள் தொடர்பாக செய்யப்படுகின்ற விமர்சனங்களுக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் பதிலளிப்பதில் எந்தவொரு விதத்திலான தேர்தல் பிரச்சாரத்தையும் (நம்ப முடியாத தேர்தல் ஊக்குவிப்புத் தகவல்களை பிரச்சாரம் செய்வதை விட்டும்) தவிர்ந்துகொள்வதோடு, வன்முறைத்தன்மையற்ற சட்டரீதியான செயற்பாடுகளின் மூலம் மாத்திரம் பதிலளித்தல்.

**(எ) உபசாரம் செய்வதைத் தவிர்த்தல் :**

1. தேர்தல் நடைபெறும் காலப்பகுதிக்குள் வாக்காளர்களை அல்லது அரச அலுவலர்களை தனியாகவோ கூட்டாகவோ தமது பிரத்தியேக அல்லது உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு அழைத்து உபசாரம் செய்வதைத் தவிர்த்தல்.

2. யாதேனுமொரு விதத்தில் நிதி வழங்குதல் அல்லது வாக்குறுதிகளை அளித்தல், கருத்திட்டங்கள் அல்லது திட்டங்களுக்கான அடிக்கல் நடுதல், பாதைகள், நீர், மின்சாரம் முதலிய வசதிகளை வழங்குவதற்கு வாக்குறுதிகளை அளித்தல் மற்றும் தமது கட்சிக்கு அனுகூலம் ஏற்படுகின்ற விதத்தில் தம்பக்கம் சாய்த்துக்கொள்ளக்கூடிய வாக்காளர்களுக்கு முறையற்ற விதத்தில் அவசரமாக அரச துறையில் பதவிகளையும் நியமனங்களையும் வழங்குவதைத் தவிர்த்தல்.

3. அரசியல் ரீதியான நியமனங்களை வழங்குதல், பதவி உயர்வுகளை வழங்குதல், இடமாற்றம் செய்தல் என்பனவற்றிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக பங்களிப்புச் செய்வதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

**(ஏ) நாட்டினம், மதம், தேசிய அடையாளங்கள், மத அடையாளங்கள் என்பவற்றின் பாவனையும் வேறு விசேட விடயங்களும் :**

1. தேசிய கீதம், தேசியக் கொடி, மத அடையாளங்கள், மதக் கொடிகள், மதத் தலைவர்களதும் மதக் குரவர்களதும் உருவப்படங்கள் அல்லது புகைப்படங்கள் போன்ற எவற்றையும் வெளியிடுவதனூடாக அல்லது பிரச்சாரம் செய்வதனூடாக யாதேனுமோர் அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் அல்லது வேட்பாளரின் ஊக்கப்படுத்தலுக்கு அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தல் ஆகாது. மேலும், மேற்குறிப்பிடப்பட்டவற்றை கட்சி/குழு அல்லது வேட்பாளர்களை ஊக்கப்படுத்தக்கூடிய கூட்டங்கள் முதலியவற்றில் அல்லது அறிவித்தல்கள், பிரச்சாரப் பலகைகள் முதலியவற்றில் காட்சிப்படுத்தல் ஆகாது. மேலும், கட்சி/வேட்பாளர் ஊக்கப்படுத்தலுக்கு எந்தவோர் அரச அலுவலரினதும் உருவப்படத்தை அல்லது வரைபடத்தை எவ்விதத்திலும் பயன்படுத்தல் ஆகாது.

2. எந்தவொரு மதக் கூட்டத்திலும் ஏதேனும் தேர்தல் முடிவில் அழுத்தமொன்றை ஏற்படுத்தும் விதத்திலான அல்லது அத்தேர்தலில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அல்லது

வேட்பாளரொருவருக்கு வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிக்காதிருப்பதற்கு வாக்காளருக்கு தூண்டுதலளிக்கும் விதத்திலான எவ்வித வெளிப்படுத்துகையையும் மேற்கொள்ளல் ஆகாது.

3. ஏதேனுமொரு தேர்தலில் அல்லது வாக்கெடுப்பில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது அவரது தேர்தல் இயக்கத்தை ஊக்கப்படுத்துவதற்கு ஏதேனுமொரு மதத்தலத்தில் எவையேனும் துண்டுப்பிரசுரங்கள், பிரச்சாரப் பலகைகள், சுவரொட்டிகள், சித்திரங்கள், அறிவித்தல்கள், வேட்பாளர்களின் உருவப்படங்கள், சின்னங்கள், குறியீடுகள், கொடிகள், பதாகைகள் முதலியவற்றைப் பகிர்ந்தளித்தல் அல்லது காட்சிப்படுத்தல் அல்லது எந்தவொரு பொதுக் கூட்டத்தையும் நடாத்துதல் ஆகாது.

எந்தவொரு தேர்தலிலும் வாக்கெடுப்பிலும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் ஏற்புடையதாகுமிடத்து, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மேற்கூறிய விடயங்களுக்கு அமைவாக செயலாற்றுவார்களென்று எதிர்பார்க்கப்படுவதோடு, இவ்வொழுக்கநெறிக் கோவையில் உள்ளடக்கியுள்ள விடயங்களை தமது முகவர்களும் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆதரவாளர்களும் பின்பற்றுகிறார்களென்று திருப்தியடையக்கூடிய விதத்திலான பொறிமுறையொன்று வேட்பாளர்களினாலும் ஏற்புடையதாகுமிடத்து, கட்சிகளின் செயலாளர்களினாலும் அமுல்படுத்தப்படுமென்று மேலும் எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

**எம். ஏ. பீ. சி. பெரேரா,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**அமீர் பாயிஸ்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**ஏ. சண்முகநாதன்,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

**பேராசிரியர் லக்ஷ்மன் திசாநாயக்க,**
உறுப்பினர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2024, யூலை 26.

EOG 08-0080

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.